[5th August 1965

சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல்

*** 83 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசின் சட்டங்களைப் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் தமிழ் மொழி பெயர்ப்புச் சம்பந்தமாக நமது மாநில அரசின் ஆலோசனையைக் கேட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A copy of the Tamil translation of the Transfer of Property Act, 1882, prepared by the Official Language (Legislative) Commission has been received for offering the suggestions and comments of the State Government thereon and the matter is under consideration. Excepting that, no other communication seeking the views of this Government on the *question of translation of Central Acts into Tamil* has so far been received from the Official Language (Legislative) Commission.

திரு. து. ப. அழகமுத்து : தலைவரவர்களே, அதில் என்னென்ன அபிப்பிராயங்கள் நம்முடைய மாநில சர்க்காரிடம் கோரப் பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெக்னிகல் டெர்ம்ஸ் எப்படிப் போடுவது என்று கேட்கப்பட்டது. பழக்கப்பட்ட வார்த்தையைப் போடலாம் என்றும், பழக்கப்பட்ட வார்த்தை ஆங்கில வார்த்தை யாக இருந்தால் அதைப் போடலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் பொதுவாக மொழிபெயர்ப்புக்கு இந்தி வார்த்தையைக் கூடியவரைக்கும் தெரிந்த டெர்மாக இருந் தால் போடலாம் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே தெரிந்த தமிழ் வார்த்தையையும், இல்லையென்றால் ஆங்கிலத்திலே தெரிந்த வார்த்தையையும் போடலாம் என்று சொல்லியிருக்கிறோம். அது இன்னும் முடிவாகவில்லை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

*** 84 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் வெளியீட்டுக் கழகம் (Bureau of Tamil Publications) வெளியிடும் நூல்கள் அரசினர் அச்சகத்தில் அச்சிடப்படுகின்றனவா அல்லது வெளி அச்சகங்களிலா ?

(இ) வெளி அச்சகங்களில் என்றால் பாரம் ஒன்றுக்கு என்ன தொகை தரப்படுகிறது ?

(உ) நூல்களுக்கான 'பிளாக்கு'-கள் செய்யத் தரப்படும் தொகை என்ன ?

5th August 1965]

(எ) கடந்த ஆண்டில் எத்தனை நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன ?

(ஐ) அந்த நூல்களின் அடக்கம் என்ன ? விற்பனை வரவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) In private presses;

(b) (1) Setting Text 12 pt.—Rs. 3.25 per page.
Setting Text 10 pt.—3.90 per page.
Setting Glossary 10 pt.—Rs. 4.00
(English and Tamil *vice versa*.)

(2) Striking—

First 1,000 *impressions*—
8 pages per forme—Rs. 5.00
4 pages per forme—Rs. 4.00
2 pages per forme—Rs. 3.00

Succeeding 1,000 *impressions*—
8 pages per forme—Rs. 4.50.
4 pages per forme—Rs. 3.50.
2 pages per forme—Rs. 2.50.

(c) 0.37 Paise per square inch.

(d) 13 books; and

(e) Net cost—Rs. 88,989.99
Sale proceeds—Rs. 70,260.75

தொழில் யூனிட்டுக்களுக்கான வாடகை

* 85 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழிற்பேட்டைகளில், தொழில் யூனிட்டுகளுக்கான வாடகையை உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) இது குறித்து அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(உ) ஆம் எனில், அதன் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Rent for the factory units in the Industrial Estates is subsidised by the Government during the initial period of five years, and thereafter the subsidised rent is increased gradually to the level of the economic rent. In accordance with the above procedure the rent for factory units in six Industrial Estates has been raised with effect from 1st April 1965 and in one Industrial Estate with effect from 1st June 1965;